DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

அமர்வு வழக்கு எண்.138/2013

Deposition of :PW -37

Name	: திரு. K.S.மகாதேவன்	Caste:	
Father's Name:	திரு. சுந்தரம்	Calling:	
Village	:	Religion:	
Taluk	:	Age:	
Date	:		

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 5th day of February -2024.

A1, A2, A6, A7, A9, A13 to A17 present. A5, A8, A11, A18 called absent. Petition u.sec.317Cr.P.C filed and allowed. A3 produced

05.02.2024

முதல் விசாரணை

நான் காவல் துறையில் துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து பணி நிறைவுபெற்று தற்போது திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் வசித்து வருகிறேன். நான் கடந்த 2008 ஆம் ஆண்டு அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தேன்.

கடந்த 16.05.2008 அன்று ஜெயங்கொண்டம் காவல்துணை கண்காணிப்பாளரின் எல்லைக்குட்பட்ட மீன்சுருட்டி காவல்நிலைய கு.எண்.130/2008 ச.பி.147, 148, 341, 324, 326, 307, 302 வழக்கில் இறந்துபோன தர்மலிங்கம்(எ) சங்கர் என்பவரது பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொள்ள சொல்லி எனக்கு உத்தரவிடப்பட்டது.

நான் இவ்வழக்கின் சம்பவ இடமான வங்குடி காலனியில் உள்ள பூராசாமி என்பவரது கடைக்கு அருகில் தலையில்லாமல் முண்டமாக கிடந்த மேற்படி

தர்மலிங்கம் (எ) சங்கர் என்பவர் பிரேதத்தின் மீது நான் அன்றைய தினம் பிற்பகல் 2.15 மணி முதல் 3.15 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டேன். சாட்சிகள் காசிநாதன், அருள், தங்கவேல், கொளஞ்சிநாதன், ஞானசேகர் ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

நான் பார்த்தபோது மேற்படி பிரேதமானது கிழக்கு மேற்காக தலையில்லாமல் உடல் மல்லாந்த நிலையிலும், கைகள் இரண்டும் ஒட்டியும், கால்கள் விரிந்தும் காணப்பட்டது. பிரேதத்தில் இடது கால் மற்றும் வலது கால் ஆகியவை வயன்று காணப்பட்டது. (தளர்ந்து காணப்பட்டது). வயிற்றில் குத்துகாயம் இருந்தது. குடல் வெளிவந்துள்ளது. வலது மார்பில் குத்துக்காயம் ஒன்று இருந்தது. இடது கை புஜத்தின் அருகருகே மூன்று வெட்டுகாயங்கள் இருந்தது. வலது தோள்பட்டையில் வெட்டு காயம் இருந்தது. அந்த உடலில் கருப்பு பிரௌன் கலந்த பூ போட்ட கை இருந்தது.

மேற்கண்ட காயங்கள் அருவாள், பட்டாகத்தி மற்றும் பயங்கர ஆயுதங்களால் ஏற்படுத்தப்பட்டிருந்தன. மேற்படி பிரேத விசாரணை சம்மந்தமாக என்னால் தயார் செய்யப்பட்ட பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.46.

மேற்படி கொலை செய்யப்பட்ட தர்மலிங்கம்(எ) சங்கர் என்பவரது தலையானது வங்குடி காலனியில் உள்ள காளியம்மன் கோவிலில் முன்புறம் உள்ள சூலத்தின் மீது சொறுகி வைக்கப்பட்டிருந்தது. அத்தலையை பொறுத்து அன்றைய தினம் மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் பிற்பகல் 3.30 மணி முதல் 3.45 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.47. மேற்படி தர்மலிங்கம்(எ) சங்கர் தலையில் வாயின் இடது பக்கம் இடது தலை ஆகிய இடங்களில் தலா இரண்டு வெட்டுகாயங்கள் காணப்பட்டது. வலது கீழ் தாடையில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது.

மேற்படி தர்மலிங்கம்(எ) சங்கர் என்பவரது தலையை அங்கிருந்து எடுத்து வந்து அதனை மேற்படியாரின் தலையில்லாத உடல் கிடந்த இடத்திற்கு கொண்டுவந்து தலையை அந்த உடலுடன் ஒட்டிவைத்து அதன்பின்னிட்டு மற்றொரு பிரேத

விசாரணையை அதே சாட்சிகள் முன்னிலையில் பிற்பகல் 3.45 மணி முதல் 4.00 வரை மேற்கொண்டேன். அதற்காக என்னால் தயாரிக்கப்பட்ட பிரேதவிசாரணை அறிக்கை அ.சா.ஆ.48.

பின்னர் மேற்படி பிரேதத்தை இறப்பிற்கான காரணத்தினை கண்டறியும் பொருட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்காக மீன்சுருட்டி காவல்நிலைய த.கா.முருகேசன் என்பவர் மூலமாக வேண்டுகோள் கடிதம் கொடுத்து ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். தர்மலிங்கம்(எ) சங்கர் என்பவரது தலையை பொறுத்து பிரேத பரிசோதனை மேற்கொள்ள கோரி என்னால் கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட படிவம் 86 (சேதமான நிலையில் உள்ளது) ஆகியவை அ.சா.ஆ.49 வரிசை. (ஆட்சேபணையுடன் குறியீடு)

தர்மலிங்கம்(எ) சங்கர் என்பவரது தலையில்லாத உடலை பொறுத்து பிரேத பரிசோதனை மேற்கொள்ள கோரி என்னால் கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட படிவம் 86(சேதமான நிலையில் உள்ளது) ஆகியவை அ.சா.ஆ.50 வரிசை.(ஆட்சேபணையுடன் குறியீடு).

<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.ஆ.46 முதல் அ.சா.ஆ.48 வரையிலான பிரேத விசாரணை அறிக்கைகளுடன் இணைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்தார்கள் சம்மனில் பஞ்சாயத்தார்களுக்கு எத்தனை மணிக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

அ.சா.ஆ.46 மற்றும் 47 ஆகிய பிரேதவிசாரணை அறிக்கைகளில் கடைசி பக்கத்தில் பிரேத விசாரணை ஆரம்பிக்கப்பட்ட மற்றும் முடிவுற்ற நேரமானது திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த இடத்தில் எழுத்து பிழை இருந்ததால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அ.சா.ஆ.47 பிரேதவிசாரணை அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள அச்சிடப்பட்ட உறைதாளில் இரண்டாவது பக்கத்தில் காலம் எண்.26 புலனாய்விற்கான காலம் என்ற இடத்தில் 15.15 முதல் 16.00 மணி வரை என்று

குறிப்பிட்டுகிறேன் என்றால் சரிதான்.

அதே ஆவணத்தில் என்னால் கையால் எழுதப்பட்ட அறிக்கையில் பிரேத விசாரணை காலம் என்ற இடத்தில் 15.30 முதல் 15.45 என்று நேரம் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான்.

அ.சா.ஆ.48 பிரேதவிசாரணை அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள அச்சிடப்பட்ட உறைதாளில் இரண்டாவது பக்கத்தில் காலம் எண்.26 இல் புலனாய்விற்கான காலம் என்ற இடத்தில் 16.00 முதல் 16.15 மணி வரை என்று குறிப்பிட்டுகிறேன் என்றால் சரிதான். அதே ஆவணத்தில் என்னால் கையால் எழுதப்பட்ட அறிக்கையில் பிரேத விசாரணை காலம் என்ற இடத்தில் 15.45 முதல் 16.00 என்று நேரம் குறிப்பிட்டிருக்கிறேன் என்றாலும், அந்த இடத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான்.

நான் மேற்கண்ட 3 பிரேத விசாரணைகள் மேற்கொண்ட போதும் சம்மந்தப்பட்ட சாட்சிகளை சம்பவ இடத்திற்கு அழைத்துசென்று ஒவ்வொருமுறையும் விசாரித்தேன். ஒவ்வொரு சாட்சிகளையும் நான் ஒவ்வொரு நேர்விலும் விசாரித்தபோது அவர்களை விசாரிக்க 3 முதல் 5 நிமிடங்கள் ஆனது. பிரேதவிசாரணை அறிகைகள் மூன்றையும் நான் சொல்ல சொல்ல எனது எழுத்தர் எழுதினார்.

நான் ஒவ்வொரு பிரேதவிசாரணையும் முடிப்பதற்கு தலா ஒருமணிநேரம் ஆகியிருக்கும் என்றால் முதல் விசாரணை முடிப்பதற்கு ஒருமணி நேரம் ஆனது. இரண்டாவது விசாரணை மற்றும் 3 வது விசாரணைகள் தலா 20 நிமிடத்தில் முடிவடைந்துவிட்டது. ஆன்டிமடம் காவல்நிலையத்திலிருந்து ஆய்வாளர் அல்லது போலிசார் யாராவது சம்ப இடத்திற்கு 16.05.2008 அன்று வந்திருந்தார்களா என்றால் வந்திருந்தார்கள்.

அன்றைய தினம் என்னுடன் எத்தனை போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை. வந்திருக்கலாம். எனக்கு காவல் துணை கண்காணிப்பாளர் போன் மூலம் உத்தரவு அளித்தார். காவல் கண்காணிப்பாளர் எனக்கு தகவல் கொடுப்பதற்கு முன்பாகவே மீன்சுருட்டி காவல் ஆய்வாளர் எனக்கு தகவல்

கொடுத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை. மீன்சுருட்டி காவல்நிலைய ஆய்வாளர் காவல் துணை கண்காணிப்பாளருக்கு தகவல் தெரிவித்தன் அடிப்படையில் தான் துணைகண்காணிப்பாளர் எனக்கு தகவல் கொடுத்தார் என்றால் சரிதான்.

சம்பவ இடத்திற்கு அருகில் கிராமநிர்வாக அலுவலர்கள் யாராவது இருந்தார்களா என்று எனக்கு நினைவில்லை. நான் சம்பவ இடத்திலிருந்து எனது காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு புறப்பட்டு சென்றேன் என்றால் மாலை சுமார் 5.00 மணிக்கு புறப்பட்டிருப்பேன். இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக மீன்சுருட்டி காவல் ஆய்வாளர் எனக்கு சம்பவ தினத்தன்று காலை 9.00 மணிக்கு தொலைபேசி வாயிலாக தகவல் கொடுத்தார் என்றால் சரியல்ல. அப்படி கொடுக்கப்பட்ட தகவலின் படி நான் அன்று காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

நான் சொன்ன நாள், நேரம், இடங்களில் வைத்து நான் சொன்னது போல் எந்த பிரேதவிசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றாலும், பிரேதவிசாரணை அறிக்கைகள் எதுவும் தயார்செய்யவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து பஞ்சாயத்தார்கள் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து நான் எந்த வேண்டுகோள் கடிதத்தையும் தயார் செய்து அனுப்பி வைக்கவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சம்பவ இடத்திலிருந்து இறந்த நபர்களின் உடல்களை மீன்சுருட்டி ஆய்வாளர் அரசு மருத்துவமனைக்கு எடுத்துசென்றுவி்ட்டார் என்றாலும், நான் பஞ்சாயத்தார்களை காவல்நிலையத்திற்கு அழைத்துசென்று அங்கு வைத்து பிரேத விசாரணை அறிக்கைகளை தயார்செய்து அங்கு வைத்து பஞ்சாயத்தார்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான், மீன்சுருட்டி மற்றும் ஆன்டிமடம் காவல்நிலைய ஆய்வாளர்கள் ஆகிய மூவரும் சேர்ந்து சம்பவதினத்தன்று காலை சுமார் 10.00 மணிக்கு வங்குடி கிராமத்திலிருந்து சுமார் 100 பொதுமக்களை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றோம் என்றாலும், எதிரிகள் திருஞானம்,

பழனிசாமி, பிரபாகரன், ராஜதுரை, திருவாளப்புத்தூர் ரமேஷ், சசிகலா, தினேஷ், கனகவள்ளி ஆகியோர் அடக்கம் என்றாலும் சரியல்ல.

அ.சா.ஆ.46 முதல் அ.சா.ஆ.48 வரையிலான ஆவணங்கள் அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணியளவில் மீன்சுருட்டி காவல்நிலையத்தில் வைத்து எங்கள் மூவராலும் கலந்து ஆலோசனை செய்யப்பட்டு பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் காவல்துணை கண்காணிப்பாளரிடமிருந்து எனக்கு எந்த தகவலும் வரவில்லை என்றாலும், மீன்சுருட்டி ஆய்வாளர் கேட்டுகொண்டதன் பேரில் நான் சம்பவ இடத்திற்கு சென்றிருக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3, 6 மற்றும் 8–ஆம் எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையானது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

13–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.